


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்





| Vol: 02 | Issue: 314 | 4 Pages | 9.6.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 314 | 4 பக்கங்கள் | 9.6.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்**

**விளக்கம்:**
ஒருவன்கறுவுகொண்டுதுன்பம்செய்தபோதிலும் அவனுக்கு திரும்ப துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாகும்.

## உயர் ரத்த அழுத்தம்; சிம்லா மருத்துவமனையில் சோனியா காந்திக்கு சிகிச்சை



சிம்லா, ஜூன் 9

காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி(வயது 78), தனது மகள் பிரியங்கா காந்தியுடன் சிம்லாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு திடீரென அவருக்கு உடல்நலபாதிப்புஏற்பட்டநிலையில்,சிம்லாவில் உள்ள இந்திரா காந்தி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சோனியா காந்தி அனுமதிக்கப்பட்டார்.

சோனியா காந்திக்கு உயர் ரத்த அழுத்தம் காரணமாக லேசான உடல்நல பாதிப்பு ஏற்பட்டதாகவும், சிகிச்சைக்கு பிறகு தற்போது அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். சிகிச்சைக்கு பிறகு சோனியா காந்தி, சிம்லாவின் சராபா பகுதியில் உள்ள பிரியங்கா காந்தியின் வீட்டிற்கு சென்று ஓய்வு எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடகா; தனிநபர் நீதிபதி ஆணையத்தின் காலம் மேலும் ஒரு மாதம் நீட்டிப்பு



பெங்களூரு, ஜூன் 9

கர்நாடகத்தில் கடந்த பா.ஜனதா ஆட்சியில் கொரோனா உபகரணங்கள் வாங்கியதில் முறைகேடுகள் நடந்திருப்பதாக காங்கிரஸ் தலைவர்கள் குற்றச்சாட்டுகூறினார்கள்.பின்னர்காங்கிரஸ்ஆட்சிஅமைந்ததும்,கொரோனா முறைகேடுகள் குறித்து விசாரிக்க முதல்மந்திரி சித்தராமையா உத்தரவிட்டார். இதற்காக ஓய்வு பெற்ற ஐகோர்ட்டு நீதிபதி ஜான் மைக்கேல் குன்கா தலைமையில்தனிநபர்ஆணையம்அமைக்கப்பட்டது.நீதிபதியும்விசாரணை நடத்தி பா.ஜனதா ஆட்சியில் முறைகேடுகள் நடந்திருப்பதாக கூறி அரசிடம் அறிக்கைகள் வழங்கினார். அந்த அறிக்கையின்படி விதானசவுதா போலீஸ் நிலையத்தில் பா.ஜனதா தலைவர்கள் மீது வழக்கும் பதிவாகி உள்ளது.

தற்போது கொரோனா சந்தர்ப்பத்தில் சாம்ராஜ்நகரில் ஆக்சிஜன் தட்டுப்பாட்டால் நோயாளிகள் உயிர் இழந்தது குறித்து ஜான் மைக்கேல் குன்கா விசாரித்து வருகிறார். அதே நேரத்தில் பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் 11 பேர் பலியானது குறித்து அவரது தலைமையில் நீதி விசாரணை நடத்தி, ஒரு மாதத்தில் அறிக்கை அளிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த ஒரு மாதம் 11 பேர் பலி குறித்து மட்டுமே அவரால் விசாரணை நடத்த முடியும் என்பதால், கொரோனா முறைகேடு குறித்து விசாரிக்க வழங்கப்பட்ட கால அவகாசத்தை ஒரு மாதம் நீட்டித்து அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, ஆகஸ்டு 1ந் தேதி பதில் ஆகஸ்டு 31ந் தேதி வரை தனிநபர் நீதிபதியின் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## ஏக்நாத் ஷிண்டேவின் விமானத்தை இயக்க மறுத்த விமானியால் பரபரப்பு



மும்பை ஜூன் 9

துணைமுதல்மந்திரி ஏக்நாத் ஷிண்டே இன்று நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஜல்காவ் சென்றார். அவர் மதியம் 3.45 மணிக்கு ஜல்காவ் விமான நிலையம் செல்ல இருந்தார். ஆனால் சில தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக விமானம் மாலை 6.15 மணிக்கு தான் ஜல்காவ் சென்றடைந்தது. எனவே ஏக்நாத் ஷிண்டே ஜல்காவ் முக்தாய்நகரில் நடந்த துறவி முக்தாய் பால்கி யாத்திரையில் கலந்து கொண்டு மீண்டும் விமான நிலையம் திரும்ப இரவு 9.15 மணி ஆகியது.

இந்தநிலையில் தனது பணி நேரம் முடிந்துவிட்டதால் ஏக்நாத் ஷிண்டே மும்பை வர இருந்த விமானத்தை இயக்க முடியாது என விமானி கூறினார். திடீரென விமானி விமானத்தை இயக்க மறுத்ததால் அதிகாரிகள் செய்வது அறியாமல் திகைத்து நின்றனர். இந்தநிலையில் மந்திரிகள் கிரிஷ் மகாஜன், குலாப்ராவ்பாட்டீல்விமானியிடம்தனிஅறையில்பேச்சுவார்த்தைநடத்தினர். இந்த பேச்சுவார்த்தை சுமார் 45 நிமிடங்கள் நடந்தது. பேச்சுவார்த்தைக்கு பிறகு விமானி விமானத்தை இயக்க ஒப்புக்கொண்டார்.

இந்த சம்பவம் காரணமாக நேற்று இரவு ஜல்காவ் விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# விருதுநகரில் தீ விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நிதியுதவி: முதல்வர் அறிவிப்பு

சென்னை ஜூன் 9

விருதுநகர் மாவட்டம், மெட்டுக்குண்டு கிராமத்தில் இயங்கிவரும் தனியார் வெடிபொருள் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.4 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், மெட்டுக்குண்டு கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான வெடிபொருள் தொழிற்சாலையில் நேற்று (07.06.2025) பிற்பகலில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்தில் அருப்புக்கோட்டை, குல்லூர்சந்தை, தெற்குத்தெருவைச் சேர்ந்த சங்கிலி (45 வயது) த/பெ.மொக்கைச்சாமி என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த



நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## வாக்ஸ் குழுமத்தின் வாக்ஸ் விருட்சம் அறக்கட்டளை சார்பாக 18 வது நிறுவனர் தினம்




வாக்ஸ் குழுமத்தின் வாக்ஸ் விருட்சம் அறக்கட்டளை சார்பாக 18 வது நிறுவனர் தினம் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வின் போது வாக்ஸ் அறக்கட்டளை வாயிலாக 600க்கும் மேற்பட்ட ஆதரவற்ற மற்றும் பார்வையற்ற பெற்றோரின் குழந்தைகளுக்குகல்விக்கானநிதியுதவி வழங்கியது.

வாக்ஸ் அறக்கட்டளை இது வரை 25,000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்விக்கான உதவித்தொகை வழங்கியுள்ளது.

வாக்ஸ் குழுமத் தலைவர் இராவணன் ஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் குழும இயக்குநர்கள், கவிதா இராவணன் மற்றும் இந்திரஜித் இராவணன் ஆகியோர் கல்வி உதவித்தொகைகான காசோலைகளை வழங்கினர் .

மேலும்ஓய்வுப்பெற்றஐ.ஏ.எஸ் அதிகாரியும் தமிழக முதலமை ச்சரின் தனிச் செயலாளருமான இராஜரத்தினம், முன்னாள் ரோட்டரி கவர்னரும் எமரால்ட் பதிப்பகத்தின் தலைமை நிர்வாக அதிகாரியுமானஒளிவண்ணன்ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

வாக்ஸ் அறக்கட்டளை ஒரு இலாப நோக்கமற்ற ஏழை எளிய மக்கள், கைம் பெண்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உயர்தர கல்வி கிடைப்பதற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனம் ஆகும். வாக்ஸ் குழுமம், ஆண்டு தோறும் தனது குழும நிறுவனங்களிலிருந்துகிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியை அறக்கட்டளை மூலம் ஏழை மாணவர்களுக்கு நன்கொடையாக வழங்குகிறது.

பிரபல தொழிலதிபர், வள்ளல் சோ. ஞானசுந்தரம்அவர்களின்நினைவை போற்றும் வகையிலும் அவரின் அளப்பரிய சேவையை கௌரவிக்கும் வகையிலும் அவரது புதல்வர் வாக்ஸ் குழுமத்தின் தலைவர் இராவணன் ஞானசுந்தரம் வாக்ஸ் அறக்கட்டளையை அமைத்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 7 ஆம் தேதி நிறுவனர் தினத்தை கொண்டாடுகிறார்.

வாக்ஸ் நிறுவனர் தினத்தின் நோக்கமே தாழ்த்தப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உறுதுணையாக நின்று அவர்கள் கல்விக்கு உதவி வழங்குவதே ஆகும்.

இந்நிகழ்ச்சியில் சுமார் 2000 நபர்களுக்கு உணவு வழங்கினர். வாக்ஸ் அறக்கட்டளை இதுவரை 25,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு உதவி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## எடப்பாடி பழனிசாமி பொய் கனவு காண்கிறார் எ.வ.வேலு

சென்னை, ஜூன் 9

200 தொகுதிகளில் வெல்வோம் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பகல்கனவு காண்கிறார். அதிமுக தலைமையிலான கூட்டணி 2026 பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும். நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க வேண்டும் என அதிமுக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியிருந்தார்.

எடப்பாடி பழனிசாமி கருத்துக்கு பதிலடி கொடுக்கும் விதமாக சென்னையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:



தமிழகத்தில் 200 தொகுதிகளுக்கு மேல் திமுக வெல்லும் என்ற தமிழக முதல்வரின் கனவு, நிச்சயிக்கப்பட்ட கனவு, வெற்றி பெறுகின்ற கனவு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிதான் '200க்கும் மேற்பட்ட இடங்களில் வென்று அதிமுக ஆட்சி அமைக்கும்' என பொய் கனவு கண்டு வருகின்றார் என்றார்.

## அப்பகரை எல்லம்மாள் கோவில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா

மதுரைதிருமங்கலம் அருகே அப்பகரைகிராமத்தில் அருள்மிகு எல்லம்மாள், பாப்பம்மாள், வெங்கிட்டம்மாள்,நொண்டி கருப்பசாமி கோவில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகவிழா

வெகு விமர்சையாக நடைபெற்றது. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கிராம பொதுமக்கள் அனைவரும் காப்பு கட்டி விரதம் மேற்கொண்டனர்.அதனைத் தொடர்ந்து கடந்த இரண்டு நாட்களாக முளைப்பாரி எடுத்தல் பாலாபிஷேகம் பொங்கள் வைத்தல் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றது. இந்த கும்பாபிஷேகத்தின் முதல் நிகழ்ச்சியாக மங்கள இசை, விக்னேஸ்வர பூஜை, லட்சுமி ஹோமம், சுதர்சன ஹோமம், உள்ளிட்ட பல்வேறு பூஜைகள்



நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து தீர்த்தங்கள் கொண்டுவரப்பட்டு அபிஷேகம் நடைபெற்றன.கோவில் உள்ளே உள்ள சிலைகளுக்கு பூஜைகள் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து கடம் புறப்பாடு நடைபெற்று மூலவர்சன்னதி ஸ்ரீஎல்லம்மாள்கோவிலிக்கு புனிதநீர்கொண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.இந்த கும்பாபிஷேக விழாவில் சுற்றியுள்ள புதுப்பட்டி அச்சம்பட்டி பொன்னம்பட்டி கிழவனேரி தொட்டியபட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர் இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர். கும்பாபிஷேகம் சீனிவாசன் பட்டர் தலைமையில் பல்வேறு பட்டர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

## மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நாட்டின் முன்னேற்றத்திற்கு பிரார்த்தனை செய்தேன் அமித்ஷா

சென்னை, ஜூன் 9

உள்துறைமந்திரிஅமித்ஷாநேற்று இரவு மதுரைவருகை தந்தார்.மதுரைஒத்தகடையில்இன்றுமாலைநடைபெறும் பாஜக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். அமித்ஷா வருகையை ஒட்டி மதுரையில் ஐந்தடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மதுரை ரிங் ரோடு பகுதியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கியுள்ள அமித்ஷா, தமிழக பாஜக நிர்வாகிகளை சந்தித்து ஆலோசித்து வருகிறார். அந்த வகையில், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் அண்ணாமலை, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் சந்தித்து பேசினார். இந்த ஆலோசனைக்கு பிறகு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அமித்ஷா சாமி தரிசனம் செய்தார். அமித்ஷா வருகையை ஒட்டி கோவிலுக்கு பக்தர்கள் அனுமதி அளிக்கப்படவில்லை. கோவிலில் சாமி தரிசனம் செய்த அமித்ஷாவுக்கு கோவில் நிர்வாகம்சார்பில்பூரணகும்பமரியாதைஅளிக்கப்பட்டது.

இந்த நிலையில், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்த்து தொடர்பாக அமித்ஷா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இன்று பூஜை செய்ததில் மகிழ்ச்சி. நாட்டின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும், நமது குடிமக்களின் நல்வாழ்விற்கும் அன்னையின் ஆசிகளைப் பெற்று பிரார்த்தனை செய்தேன்.என தெரிவித்துள்ளார்.



தினகனி



# காஞ்சிபுரம் ஆற்காடு நாராயணசாமி முதலியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் காஞ்சிபுரம் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்கினார்

சென்னை, ஜூன் 9

தி.மு.க.வுக்கு எதிரான வாக்குகள் அதிகரித்து வருகிறது. மத்திய மந்திரி அமித்ஷா தமிழகத்துக்கு வருவது அ.தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்கு பலம் சேர்க்கும் என த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் கூறினார்.

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்க திருப்பூர் வந்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

பா.ஜனதா தமிழகத்தில் அதிக அளவில் வளர்ந்து வருகிறது. அகில இந்திய தலைவர்கள், தமிழகத்துக்கு வந்து ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து வருகிறார்கள். சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தமிழகத்துக்கு வருவது கட்சியினருக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கும். அ.தி.மு.க., பா.ஜனதா, த.மா.க. மற்றும் ஒத்த கருத்துடைய கூட்டணி கட்சிகளுக்கும் பலம் சேர்க்கும். வலுவான கூட்டணியாக அமையும். மக்களின் ஆதரவை பெற்றுள்ளோம். ஆட்சி மாற்றமே எங்களுடைய நோக்கம். இந்த நோக்கத்துக்கு ஒத்த கருத்துடைய கட்சிகள் இணைந்து பணியாற்றி ஆட்சி மாற்றத்துக்கு வழி வகை செய்ய வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.



தி.மு.க. ஆட்சியில் 4 ஆண்டுகளில் வேதனையான சாதனையைத்தான் பார்க்க முடிகிறது. மக்களுக்கான வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை. எங்கும் ஆர்ப்பாட்டம், போராட்டம் நடக்கிறது. கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் கொடுமை, போதை கலாசாரத்தை கட்டுப்படுத்த காவல்துறையாலும் முடியவில்லை. அரசின் செயல்பாடும் இல்லை. இன்னும் 10 மாதங்களில் எப்படி சரி செய்ய முடியும் என்ற அவநம்பிக்கைக்கு மக்கள் வந்துவிட்டார்கள். தி.மு.க.வுக்கு எதிரான வாக்குகள் அதிகரித்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# டாக்டர் ராமதாசுடன், ஆடிட்டர் குருமூர்த்தி மீண்டும் சந்திப்பு

சென்னை, ஜூன் 9

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், அவரது மகனும் கட்சி தலைவருமான டாக்டர் அன்புமணி ராமதாசுக்கும் இடையே மோதல் இருந்து வரும் நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு தைலாபுரம் இல்லத்தில் ராமதாசை ஆடிட்டர் குருமூர்த்தி சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு நட்பு ரீதியானது என ராமதாஸ், குருமூர்த்தி இருவரும் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் டாக்டர் ராமதாஸ் இன்று தைலாபுரத்தில் இருந்து சென்னை வந்தார். சென்னை தியாகராயநகரில் உள்ள ஏ.கே.மூர்த்தி மகன் விஜய்



மகேஷ் இல்லத்தில் இருந்த ராமதாசுடன், ஆடிட்டர் குருமூர்த்தி 2வது முறையாக இன்று இரவு சந்தித்து பேசினார். சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்த சந்திப்பின் போது கூட்டணி குறித்து அவர்கள் பேசியதாக கூறப்படுகிறது. மத்திய மந்திரி அமித்ஷா, மதுரை வந்துள்ள நிலையில் குருமூர்த்தியின் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க.வுக்கு எதிரான வாக்குகள் அதிகரித்து வருகிறது ஜி.கே. வாசன் பேட்டி

திருப்பூர் ஜூன் 9

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக இன்று திருப்பூர் வந்தார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

பா.ஜ.க. தமிழகத்தில் அதிக அளவில் வளர்ந்து வருகிறது. அகில இந்திய தலைவர்கள், தமிழகத்துக்கு வந்து ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து வருகிறார்கள். சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தமிழகத்துக்கு வருவது கட்சியினருக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கும். அ. தி.மு.க., பா.ஜ.க., த. மா.க. மற்றும் ஒத்த கருத்துடைய கூட்டணி கட்சிகளுக்கும் பலம் சேர்க்கும். வலுவான கூட்டணியாக அமையும். மக்களின் ஆதரவை பெற்றுள்ளோம். ஆட்சி மாற்றமே எங்களுடைய நோக்கம். இந்த நோக்கத்துக்கு ஒத்த கருத்துடைய கட்சிகள் இணைந்து பணியாற்றி ஆட்சி மாற்றத்துக்கு வழி வகை செய்ய வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

தி.மு.க. ஆட்சியில் 4 ஆண்டுகளில் வேதனையான சாதனையைத்தான் பார்க்க முடிகிறது. மக்களுக்கான வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை. எங்கும் ஆர்ப்பாட்டம், போராட்டம் நடக்கிறது. கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் கொடுமை, போதை கலாசாரத்தை கட்டுப்படுத்த காவல்துறையாலும் முடியவில்லை. அரசின் செயல்பாடும் இல்லை. இன்னும் 10 மாதங்களில் எப்படி சரி செய்ய முடியும் என்ற அவநம்பிக்கைக்கு மக்கள் வந்துவிட்டார்கள். தி.மு.க.வுக்கு எதிரான வாக்குகள் அதிகரித்து வருகிறது.

வரி விதிப்பு விண்ணை முட்டும் அளவுக்கு உள்ளது. மாநகராட்சி, நகராட்சி வரி விதிப்பு மக்களுக்கு மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தியுள்ளது. இந்தஅரசுவேடிக்கை பார்த்து வருகிறது. திருப்பூர் மாநகராட்சி பகுதியில் குப்பைகள் குவிந்து வருகிறது. சாலைகள் குண்டும், குழியுமாக காணப்படுகிறது. இதனால் தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலை திருப்பூரில் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# நாகர்கோவில்-காச்சிகுடா இடையே எக்ஸ்பிரஸ் ரெயில் சேவை நீட்டிப்பு

சென்னை, ஜூன் 9

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பயணிகளின் வசதிக்காக தெலுங்கானா மாநிலம் காச்சிகுடாநாகர்கோவில் இடையிலான சிறப்பு எக்ஸ்பிரஸ் ரெயில் சேவை நீட்டிக்கப்படும்.

அதன்படி, காச்சிகுடாவில் இருந்து வருகிற 13ந் தேதி முதல் அடுத்த மாதம் 11ந் தேதி வரை (வெள்ளிக்கிழமை மட்டும்) நாகர்கோவிலுக்கு சிறப்பு ரெயில் (வண்டி




எண்07435) இயக்கப்படுகிறது. அதே போல, நாகர்கோவிலில் இருந்து வருகிற 15ந் தேதி முதல் அடுத்த மாதம் 13ந் தேதி வரை(திங்கட்கிழமை மட்டும்) காச்சிகுடாவிற்கு சிறப்பு ரெயில் (07436) இயக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அபாய சங்கிலியை இழுத்து நடுவழியில் ரெயிலை நிறுத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்ட பயணிகள்

சென்னை , ஜூன் 9

சென்னையில் இருந்து திருவனந்தபுரம் சென்ற விரைவு ரெயிலில் அபாய சங்கிலியை இழுத்து ரெயிலை நிறுத்தி பயணிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஜோலார்பேட்டை அருகே ஏசி இயங்காததால் அபாய சங்கிலியை இழுத்து ரெயிலை நடுவழியில் நிறுத்தி பயணிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.



இதனை தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்ட பயணிகளிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். தண்டவாளத்தில் இறங்கி பயணிகள் வாக்குவாதம் செய்ததால் ரெயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது .

# சென்னை: திருமணமான 10 நாட்களில் புதுப்பெண் தற்கொலை ஆர்.டி.ஓ. விசாரணை



செங்கல்பட்டு, ஜூன் 9

சென்னையை அடுத்த ஆதம்பாக்கம் அம்பேத்கர் நகரைச் சேர்ந்தவர் ஜெகன்நாதன் (30 வயது). இவரது சொந்த ஊர் செஞ்சி ஆகும். பி.எஸ்சி. பட்டதாரியான இவர், தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். இவருக்கும், வந்தவாசி மம்முன்னை கிராமத்தைச் சேர்ந்த ஷாலினி (26 வயது) என்ற பி.காம். பட்டதாரி பெண்ணுக்கும் கடந்த மாதம் 28ந் தேதி நங்கநல்லூரில் திருமணம் நடந்தது. இருவரும் மறு வீடாக அவர்களது சொந்த ஊரான வந்தவாசி மற்றும் செஞ்சிக்கு சென்றுவிட்டு நேற்று முன்தினம் சென்னைக்கு திரும்பினர்.

ஷாலினிக்கு தலைவலிப்பதாக கூறியதால் அவருக்கு கடையில் மாத்திரை மற்றும் காலை உணவு வாங்கி கொடுத்து அதே பகுதியில் வசிக்கும் தனது சகோதரி விஜயா வீட்டுக்கு ஜெகன்நாதன் சென்றுவிட்டார். பின்னர் மதியம் வீட்டுக்கு வந்தபோது, வீட்டின் கதவை உள்புறமாக பூட்டி விட்டு ஷாலினி, தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து ஆதம்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஷாலினி தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர். ஷாலினிக்குதிருமணமாகி 10நாட்களேஆவதால்இதுபற்றிஆர்.டி.ஓ.விசாரணைக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பேரன் திருமணத்துக்கு அழைக்காததால் விஷம் குடித்து முதியவர் தற்கொலை

தென்காசி ஜூன் 9

தென்காசி மாவட்டம் கடையம் அருகே உள்ள மைலப்புரத்தை அடுத்த சின்னக்குமார்பட்டி கீழத்தெருவைச் சேர்ந்தவர் ஆறுமுகம் (87 வயது). விவசாயியான இவர் கடந்த 4ந்தேதி திடீரென்று வீட்டில் விஷம் குடித்து மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக பாளையங்கோட்டை ஐகிரவுண்டு அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து கடையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், ஆறுமுகத்தின் மகள் அரியபுரத்தில் வசித்து வருகிறார். அவருடைய மகனுக்கு திருமணம் நடைபெற்றது. இந்த திருமணத்தில் கலந்து கொள்ள ஆறுமுகத்தை அவரது பேரன் அழைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த ஆறுமுகம் விரக்தியில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது.

# நெல்லை திருச்செந்தூர் இடையே சிறப்பு ரெயில் இயக்கம்

சென்னை, ஜூன் 9

வைகாசி விசாகத்தையொட்டி ஜூன் 9ம் தேதி நெல்லை திருச்செந்தூர் இடையே முன்பதிவு செய்யப்படாத பயணிகள் சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது .

நெல்லையில் இருந்து காலை 9.15 மணிக்கு புறப்படும் ரெயில் (06101)



காலை 10.50 மணிக்கு திருச்செந்தூர் சென்றடையும். மறுமார்க்கமாக, திருச்செந்தூரில் இருந்து காலை 11.20 மணிக்கு புறப்படும் ரயில் (06102) பிற்பகல் 12.55 மணிக்கு நெல்லை வந்தடையும்.

திருச்செந்தூரில் இருந்து இரவு 9.00 மணிக்கு புறப்படும் ரெயில் (06103) இரவு 10.30 மணிக்கு நெல்லை சென்றடையும்; நெல்லையில் இருந்து இரவு 11.00 மணிக்கு புறப்படும் ரயில் (06104) நள்ளிரவு 12.30 மணிக்கு திருச்செந்தூர் வந்தடையும் சிறப்பு ரெயில் பாளையங்கோட்டை, செய்துங்கநல்லூர், தாதன்குளம், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, நாசரேத், கச்சனாவிளை, குரும்பூர், ஆறுமுகநேரி, காயல்பட்டினம் ஆகிய இடங்களில் நின்று செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது

# தூத்துக்குடி: வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் தகவல்

தூத்துக்குடி ஜூன் 9

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து எவ்வித வேலை வாய்ப்பும் கிடைக்காமல் பல ஆண்டுகளாக காத்திருக்கும்

இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் காத்திருப்பவராக இருத்தல் வேண்டும். தொடர்ந்து பதிவை புதுப்பித்து இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதுக்கு மிகாமலும், ஏனையோர் 40 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72 ஆயிரத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பயிலும் மாணவர் மாணவிகளுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படமாட்டாது. எனினும் தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல் வழி மூலம் கல்வி கற்பவர்கள் உதவித் தொகை பெறலாம்.

ஏற்கனவே உதவித் தொகை பெற்று வருபவர்கள் தொடர்ந்து 3 ஆண்டுகள் வரை உதவித்தொகை பெற, தற்போதைய தேதி வரை வங்கிகளில் குறிப்புகள் இடப்பட்ட வங்கிக்கணக்கு புத்தக நகலுடன் சுயஉறுதிமொழி ஆவணத்தையும் பூர்த்தி செய்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும்மையத்திற்கு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை:

பிற அரசு அலுவலகங்கள் வாயிலாக எந்தவிதமான உதவித்தொகையும் பெறாத மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவு பெற்ற மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை கோரி விண்ணப்பிக்கலாம். எந்த ஒருதனியார்நிறுவனத்தில் பணி புரியாதவராகவோ, இதுவரை இத்திட்டத்தில் பயன்பெறாதவராகவோ இருக்க வேண்டும்.

இந்த உதவித்தொகை பெறுவதற்கு, அனைத்துக் கல்விச்சான்றுகள், வேலைவாய்ப்பு அடையாள அட்டை ஆகியவற்றுடன் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோரம்பள்ளம், தூத்துக்குடி என்ற முகவரிக்கு சென்று நேரில் விண்ணப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ரசாயனம் ஏற்றி சென்ற லாரி மோதி 2 பேர் உயிரிழப்பு

செங்கல்பட்டு, ஜூன் 9

செங்கல்பட்டு மாவட்டம் அருகே ரசாயனம் (ஆசிட்) ஏற்றிகொண்டு லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது. கல்பாக்கம் அருகே சென்றுகொண்டிருதபோது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் லாரி சாலையில் கவிழ்ந்தது. மேலும் லாரியில் இருந்து ரசாயனம் வெளியேறியது.

இந்த விபத்தில் மிதி வண்டியில் வந்த வாயலூர் பகுதியைச் சேர்ந்த துரை மற்றும் வெளியூரை சேர்ந்த அடையாளம் தெரியாத நபர் என இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். லாரியில் இருந்து ரசாயனம் வெளியேறி வருவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். மேலும் லாரியை ஓட்டி வந்த டிரைவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் லாரியில் இருந்து வெளியேறி வரும் ரசாயனத்தை தடுக்க தீவிர முயற்சி மேற்கொண்டனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சிறிது பரபரப்பை ஏற்படுத்தியது.

# மருதமலையில் இன்று பக்தர்கள் வாகனங்களில் செல்ல தடை

கோவை, ஜூன் 9

கோவையை அடுத்த மருதமலையில் சுப்பிரமணியசுவாமி கோவில் உள்ளது. இந்த கோவிலில் வருகிற 9ந் தேதி வைகாசி விசாகம் நடைபெற உள்ளது. இதையொட்டி பக்தர்கள் அதிக அளவில் மருதமலைக்கு வந்து முருகனை தரிசனம் செய்வது வழக்கம்.

இந்த நிலையில், பாதுகாப்பு மற்றும் நெரிசலை தவிர்க்க வருகிற 9ந் தேதி மருதமலை மலைப்பாதையில் 2 மற்றும் 4 சக்கரவாகனங்களில் பக்தர்கள் செல்ல தடை விதிக்கப்பட்டு உள்



ளது. எனவே பக்தர்கள் மலைப்படிகள்வழியாகவும் கோவில் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள பஸ்களிலும் சென்று சுவாமியை தரிசனம் செய்யலாம்என்றுகோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# தென்காசியில் மாணவிக்கு பாலியல் தொல்லை: துப்பாக்கியை காட்டி மிரட்டியவர் மும்பையில் கைது

தென்காசி ஜூன் 9

தென்காசி மாவட்டம் சுரண்டை பகுதியைச் சேர்ந்தநீலகண்டன்(வயது 58), தனியார் டிராவல்ஸ் மேலாளராக வேலை பார்த்து வந்தார். தென்காசி அருகே உள்ள கிராமத்தில் இவரது நண்பர் வீடு உள்ளது. நீலகண்டன் அடிக்கடி அந்த வீட்டிற்கு சென்றுவந்தார். அப்போது நண்பரின் மகளான 12ம் வகுப்பு மாணவியுடன் பேசி வந்தார்.

இந்த நிலையில் கடந்த 9.2.2023 அன்று அந்த மாணவியின் தம்பி உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனால் வீட்டில் மாணவி மட்டும் தனியாக இருந்தார். அப்போது வீட்டிற்கு வந்த நீலகண்டன், மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகவும், துப்பாக்கியை காட்டி இந்த விஷயத்தை வெளியே சொன்னால்சுட்டுக்கொன்றுவிடுவேன் என மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து மாணவி, ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ஆனால்அந்தபுகாரை பெற்றுக் கொண்டு வழக்குப் பதிய கால தாமதம் செய்ததாககூறப்படுகிறது. இதையடுத்து மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த கோர்ட்டு, நீலகண்டன் மீது போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டது.

அதனை தொடர்ந்து மாணவியை பாலியல் தொந்தரவு செய்த நீலகண்டன் மீது காவல் நிலையத்தில் கடந்த மே 17ம்தேதி வழக்குப்பதிவு செய்யபட்டது. இதை அறிந்த அவர் தலைமறைவானார். போலீசார் தனிப்படை அமைத்து தீவிரமாக தேடி வந்தனர். நீலகண்டன்மும்பையில் இருப்பதாக தனிப்படைக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் போலீசார்அங்கு விரைந்து சென்று, நீலகண்டனை கைது செய்து அழைத்து வந்தனர். பின்னர் அவர் தென்காசி கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# புதுச்சேரியில் பேராசிரியரிடம் ரூ.54.42 லட்சம் மோசடி செய்தவர் கைது



புதுச்சேரி ஜூன் 9

பங்குசந்தையில் அதிகம் சம்பாதிக்கலாம் எனக் கூறி பேராசிரியரிடம் ரூ.54.42 லட்சம் மோசடி செய்த வாலிபரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரியை சேர்ந்தவர் ராஜகுமாரன். ஓய்வுபெற்ற அரசு கல்லூரி பேராசியரான இவர், பேஸ்புக்கில் பங்கு சந்தை விளம்பரம் ஒன்றை பார்த்து, அதில் இருந்த லிங்கை கிளிக் செய்து, வாட்ஸ்அப் குருப்பில் சேர்ந்துள்ளார். இதையடுத்து ராஜகுமாரனை, மஞ்சு பட்சிசா என்பவர் வாட்ஸ்அப் கால் மூலம் தொடர்பு கொண்டு டெலிகிராம் குருப்பில் சேர்த்து, பங்குசந்தையில் 83 சதவீதம் லாபம் பெற்று தருவதாக கூறியுள்ளார்.

மேலும், எஸ்பிஜஎஸ் என்ற ஆப் லிங்க்கையும் அனுப்பி பதிவிறக்கம் செய்து முதலீடு செய்யுமாறு தெரிவித்துள்ளார். அதனை உண்மை என நம்பிய ராஜகுமாரன் அதில் ரூ.54.42 லட்சத்தை முதலீடு செய்துள்ளார். இதையடுத்து அவர் பதிவிறக்கம் செய்த ஆப்பில் லாபத்துடன் சேர்த்து ரூ.96 லட்சத்து 3 ஆயிரத்து 669இருப்பதாக காட்டியுள்ளது.

ஆனால் அந்த பணத்தை ராஜகுமாரன் எடுக்க முயன்றுள்ளார். ஆனால் முடியவில்லை. அதன்பிறகுதான் அவருக்கு அது போலி பங்குசந்தை என தெரிந்தது. அதிர்ச்சியடைந்த ராஜகுமாரன் உடனடியாக இதுகுறித்து புதுச்சேரி சைபர் கிரைமில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தினர். இதில் அசாமை சேர்ந்த அஜிபுர் ரகுமான் என்பவர் இந்த மோசடியில் ஈடுபட்டது தெரிய வந்தது.

அசாம் விரைந்த சைபர் கிரைம் போலீசார், அஜிபுர் ரகுமானை கைது செய்தனர். பின்னர் அவரை நேற்று புதுச்சேரி அழைத்து வந்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், அவர் மீது ஏற்கனவே 30க்கும் மேற்பட்ட மோசடி புகார்கள் இருப்பதும், அவரது சகோதரர்வங்கிக்கணக்கில் ரூ.2.50 கோடி பணப்பரிவர்த்தனை நடந்திருப்பதும் தெரியவந்தது. அவரிடமிருந்து ஒரு சிம்கார்டு, 3 செல்போன்கள், வைபை இன்டர்நெட், 2 லேப்டாப், ரூ.2 லட்சம் பணம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு மத்திய சிறையில் அடைத்தனர். இவ்வழக்கில் மேலும் 3 பேருக்கு தொடர்பு இருப்பதாகவும், அவர்களை தேடி வருவதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

# ஆன்லைன் ரம்மியில் பணத்தை இழந்ததால் விபரீதம் டிரிப்ஸில் விஷமருந்து செலுத்தி திண்டுக்கல் டாக்டர் தற்கொலை: காரில் சடலம் மீட்பு; கொடைக்கானலில் பரபரப்பு



கொடைக்கானல், ஜூன் 9

கொடைக்கானலில் ஆன்லைன் ரம்மியில் பணத்தை இழந்த டாக்டர் காருக்குள் அமர்ந்தபடி டிரிப்ஸில் விஷமருந்து செலுத்தி கொண்டு தற்கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர், வசந்தா நகரை சேர்ந்த ஜெயராஜ் – ஆசிரியை பெஸ்கிலால் தம்பதியின் மகன் ஜோஸ்வா சாமுராஜ் (29). டாக்டர். திண்டுக்கல்தனியார்மருத்துவமனையில் பணியாற்றி கொண்டே கொண்டு சேலம் தனியார் மருத்துவக்கல்லூரியில் மயக்கவியல் பாடப்பிரிவில் மேற்படிப்பு படித்து வந்தார்.

இவர் ஆன்லைன் ரம்மி விளையாட்டிற்கு அடிமையாகி ரூ.7 லட்சம் வரை இழந்துள்ளதாகவும், இந்த பணத்தை படிப்புக்கு எனக்கூறி வீட்டிலிருந்து வாங்கியதாகவும், இதையறிந்து பெற்றோர், உறவினர்கள் அவரை தட்டி கேட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த ஜோஸ்வா சாமுராஜ், கடந்த ஜூன் 2ம் தேதி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக கடிதம் எழுதி வைத்து விட்டு மாயமானார். இதுகுறித்த புகாரில் வேடசந்தூர் போலீசார் விசாரித்து வந்தனர்.

இந்நிலையில் கொடைக்கானல் பூம்பாறை மலைக்கிராமத்திற்கு செல்லும் சாலையில் கார் ஒன்று கடந்த சில நாட்களாக நின்றிருப்பதை கண்டு அப்பகுதி மக்கள் நேற்று கொடைக்கானல் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது காரில் வாலிபர் ஒருவர் தனக்கு தானே டிரிப்ஸ் மூலம் விஷ மருந்தினை செலுத்தி கொண்ட நிலையில் இறந்து கிடந்ததும், விசாரணையில் அவர் மாயமான ஜோஸ்வா சாமுராஜ் என்பதும் தெரியவந்தது. பின்னர் போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர். ஆன்லைன் ரம்மியில் பணம் இழந்ததால் டாக்டர் டிரிப் மூலம் மருந்தை செலுத்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஜூன் 4ம் தேதி முதல் 6ம் தேதி வரை 12.30 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்கு பயணம்: பயணிகள் தேவைக்கேற்ப கூடுதல் பஸ்கள் இயக்கம்; போக்குவரத்து துறை தகவல்

சென்னை, ஜூன் 9

பக்ரீத் மற்றும் வாரவிடுமுறையையொட்டி கடந்த ஜூன் 4ம் தேதி முதல் ஜூன் 6ம் தேதி வரை 12.30 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டதாக போக்குவரத்து துறை தகவல் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு திருப்பூர் ஆகிய இடங்களுக்கு முன்பதிவு அடிப்படையில் சிறப்பு பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

கடந்த 4ம் தேதி தினசரி இயக்கக்கூடிய 1,136 பேருந்துகளுடன் கூடுதலாக 200 பேருந்துகள் இயக்கப்பட்டு 73,480 பயணிகளும், 5ம் தேதி தினசரி இயக்கக்கூடிய 1,136 பேருந்துகளுடன் கூடுதலாக 622 பேருந்துகள் இயக்கப்பட்டு 96,690 பயணிகளும் மற்றும் 6ம் தேதி தினசரி இயக்கக்கூடிய 1,136 பேருந்துகளுடன் கூடுதலாக 798 பேருந்துகள் இயக்கப்பட்டு 1,06,205 பயணிகளும் பயணம் மேற்கொண்டுள்ளனர். கடந்த 3 நாளில் பயணிகளின் தேவைக்கேற்பவும், முன்பதிவு அடிப்படையிலும் போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளது. இந்த 3 நாளில் 24,831 முன்பதிவு செய்த பயணிகள் உட்பட 2,76,735 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.



சென்னையிலிருந்து 94,926 முன்பதிவு இருக்கைகள் முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள வசதி அளித்துள்ள நிலையில் 26 சதவீதம் இருக்கைகள் மட்டுமே கடந்த மூன்று தினங்களிலும் முன்பதிவு செய்து பயணம் செய்துள்ளனர்.

அரசு பேருந்துகளில் முன்பதிவு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள பேருந்து இருக்கையில் அதிகபட்சமாக 9 சதவீதம் மட்டுமே முன்பதிவு செய்யப்படுகிறது. தொலைதூர பயணம் மேற்கொள்ளும் பயணிகள் கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பயணிகள் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்யும் பட்சத்தில் தேவைக்கு ஏற்ப கூடுதலாக பேருந்துகளை இயக்க வழிவகை செய்யப்படும். எனவே பயணிகள் தங்களது பயணத்தினை முன்கூட்டியே திட்டமிட்டு முன்பதிவு செய்து எந்தவித சிரமமின்றி பயணம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சின்னத்திரை நடிகர் சங்க பொதுக்குழுவில் கோஷ்டி மோதல், கடும் வாக்குவாதம்



சென்னைம் ஜூன் 9

சின்னத்திரை நடிகர் சங்கத்தின் 18வது பொதுக்குழு கூட்டம் நேற்று சென்னை விருகம்பாக்கத்தில் நடந்தது. தலைவர் சிவன் சீனிவாசன், பொதுச்செயலாளர் போஸ் வெங்கட் உள்பட 100க்கும் மேற்பட்ட சின்னத்திரை நடிகர்கள் கலந்துகொண்டனர். இந்நிலையில், சின்னத்திரை நடிகர்கள் சங்கத்தில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் நிர்வாகிகள் ரவிவர்மா, ரவிசங்கர், எம்.டி.மோகன் ஆகியோரை மீண்டும் சேர்ப்பதற்கு ஒரு தரப்பினர் ஆதரவும், மற்றொரு தரப்பினர் எதிர்ப்பும் தெரிவித்தனர்.

சிவன் சீனிவாசன் பேசும்போது இணை செயலாளர் தினேஷ் கூச்சலிட்டதால் சலசலப்பு ஏற்பட்டது. அப்போது எதிரணி தரப்பில், '2022ல் சங்கத்தின் தலைவராக இருந்த ரவிவர்மா செய்த தவறுகளை சுட்டிக்காட்டி, கடந்த 5 வருடங்களாக சங்கத்தின் உறுப்பினர் சிலருக்கு வேலையிழப்பு, பேச நேரம் தரப்படவில்லை, அப்படி பேசினால் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கிவிடுகிறார்கள்' என்பது போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. பிறகு இணை செயலாளர் தினேஷ் நிருபர்களிடம் கூறுகையில், 'சின்னத்திரை நடிகர் சங்க பொதுக்குழுவில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட மருத்துவ திட்டத்தைமீண்டும்கொண்டு வரவில்லை. மெடிக்கல் கார்டு மூலம் சிகிச்சை பெற்ற □தர் என்பவருக்கு தவறான சிகிச்சையால் ஒரு கண் பறிபோய்விட்டது. அது சம்பந்தமாக கடிதம் கொடுத்தபோது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நிவாரணமும் கிடைக்கவில்லை. இந்த சங்கம் தொழிலாளர்கள் நலத்துறையில் பதிவு செய்யப்பட்டது. இது வரை யாருக்கும் வேலை வாய்ப்புக்காக எதையும் செய்யவில்லை. பேச அனுமதி இல்லை. ரவிவர்மா, எம்.டி.மோகன் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர். அதற்கு விளக்கமளிக்க முயன்றால் அனுமதிப்பது இல்லை. நான் பொறுப்பில் இருந்தாலும், என் கருத்தை பதிவு செய்ய அனுமதி இல்லை' என்றார்.

# தேசிய திறனாய்வுத்தேர்வு உதவித்தொகைக்கான பதிவுக்கு புது நடைமுறை அறிமுகம்

சென்னை, ஜூன் 9

தேசிய திறனாய்வுத்தேர்வு உதவித்தொகைக்கான ஆன்லைன் பதிவுக்கு இந்த ஆண்டு முதல் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படுகிறது. அதன்படி, ஓடிஆர் எனப்படும் ஒருமுறை பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கல்வியில் சிறந்து விளங்கும் 8ம் வகுப்பு மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் என்எம்எம்எஸ் எனப்படும் தேசிய திறனாய்வுத்தேர்வு நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறுவோருக்கு 12ம் வகுப்பு வரை மாதம்தோறும் ரூ.1,000 கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் நடத்தப்படும் இத்தேர்வை அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், ஊராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தேர்வை எழுதலாம். தமிழகத்தில் இத்தேர்வை மத்திய அரசு சார்பில் அரசு தேர்வுத்துறை நடத்துகிறது.

இந்நிலையில் நடப்பு கல்வி ஆண்டுக்கான (202526) தேசிய திறனாய்வுத்தேர்வு உதவித்தொகைக்கான விண்ணப்ப பதிவில் புதிய நடைமுறை பின்பற்றப்படும் என ஒன்றிய பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய பள்ளிக்கல்வித்துறை மாநில அரசுகளின் பள்ளிக்கல்வித்துறை செயலர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், 202526ம் கல்வி ஆண்டுக்கான தேசிய திறனாய்வுத்தேர்வு உதவித்தொகைக்கான ஆன்லைன் பதிவு ஜூன் 2ம் தேதி முதல் தொடங்கப்பட வேண்டும்.

தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (என்எஸ்பி) உதவித்தொகைக்காக ஆன்லைனில் பதிவுசெய்யும்போது ஓடிஆர் எனப்படும் ஒருமுறை பதிவு அவசியம். இதற்கு மாணவர்களின் செல்போன் எண் தேவை. ஆதார் சார்ந்த இகேஒய்சி மேற்கொள்ளப்படும்போது ஓடிஆர் ஐடி வழங்கப்படும். இதுதொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் கடந்த ஆண்டே அனுப்பப்பட்டன. மாணவர்களுக்கு எளிதில் உதவித்தொகை கிடைக்கும் வகையில் இதுகுறித்து பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கும் தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# வேதாரண்யத்தில் 9,000 ஏக்கரில் உப்பு உற்பத்தி மும்முரம்



வேதாரண்யம், ஜூன் 9

வேதாரண்யத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்ததால் 9000 ஏக்கரில் உப்பு உற்பத்தி தீவிரமடைந்துள்ளது. நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் அகஸ்தியன் பள்ளி, கோடியக்காடு, கடிநெல்வயல் உள்ளிட்ட பகுதியில் 9,000 ஏக்கரில் உப்பு உற்பத்தி நடந்து வருகிறது. தமிழ்நாட்டில் தூத்துக்குடிக்கு அடுத்தபடியாக உப்பு உற்பத்தியில் வேதாரண்யம் இரண்டாமிடம் வகிக்கிறது. இத்தொழிலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 10 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வேதாரண்யத்தில் ஆண்டுக்கு 6 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி நடந்து வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் நாள்தோறும் அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த மாதம் பருவம் தவறி பெய்த பலத்த மழையால் உப்பங்களில் மழைநீர் தேங்கி நின்றதால் உப்பு உற்பத்தி துவங்கியது. இதனால் 9000 ஏக்கரில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதையடுத்து உப்பளங்களில் தேங்கியிருந்த மழைநீரை அகற்றும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். கடந்த ஒரு வாரமாக வெயில் அடித்து வருவதால் உப்பு உற்பத்தி துவங்கி மும்முரமாக நடந்து வருகிறது. உப்பு உற்பத்தியில் ஆண், பெண் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கானோர் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும் உற்பத்தி செய்து சேமித்து வைத்திருந்த உப்பை விற்பனைக்காக வெளியூர்களுக்கு லாரிகளில் அனுப்பும் பணியும் நடந்து வருகிறது.

தற்போது ஒரு டன் உப்பு ரூ.2,000 ரூ.2,500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து உப்பு உற்பத்தியாளர்கள் கூறுகையில், ஒவ்வொரு ஆண்டும் 6 லட்சம் மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படும். கடந்த மாதம் பருவம் தவறி பெய்த மழையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. தற்போது வெயில் அடித்து உப்பு உற்பத்தி மும்முரமாக நடந்து வந்தாலும் இந்தாண்டு உற்பத்தி இலக்கான 6 லட்சம் இலக்கை எட்டுவது கடினம் தான் என்றனர்.

# இசைப்பள்ளி தேர்ச்சி சான்றிதழ், 10, 12ம் வகுப்பு தேர்ச்சிக்கு சமம்: பள்ளிக்கல்வித்துறை அரசாணை வெளியீடு




சென்னை, ஜூன் 9

இசைப்பள்ளி தேர்ச்சி சான்றிதழ் 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழுக்கு சமமானது என பள்ளிக்கல்வித்துறை அரசாணை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக, பள்ளிக்கல்வித்துறை செயலர் சந்தரமோகன் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது: பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தமிழ் (பகுதி1) ஆங்கிலம் (பகுதி2) ஆகிய பாடங்களை பயின்று வருகின்றனர். இசைப்பள்ளி மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பை தடையின்றி பெறும் பொருட்டும், இடைநிற்றலை தவிர்க்கும் வகையிலும், இசை குறித்த பட்டறிவை ஊக்குவிக்கும் வகையிலும், வேலைவாய்ப்பை பெறும் நோக்கிலும் அவர்கள் அரசு தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் 10ம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாடங்களில் தேர்ச்சி பெறும் பட்சத்தில் 10ம் வகுப்பில் பகுதி3ல் உள்ள முதன்மை பாடங்களான கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்களுக்குப் பதிலாக இசைப்பள்ளி பாடங்களில் முதன்மைப்பாடம் துணைப்பாடம் மற்றும் வாய்மொழித்தேர்வு, இசையியல் பாடங்கள் (தியரி எக்ஸாம்) ஆகியவற்றை சிறப்பு நிகழ்வாக பகுதி3ன் முதன்மை பாடங்களாக கருதி அவர்களின் இசைப்பள்ளி தேர்ச்சி சான்றிதழை அரசு தேர்வுகள் இயக்கத்தால் வழங்கப்படும் 10ம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழுக்கு இணைத்தன்மை வாய்ந்தது என அரசு தேர்வுத்துறை சான்றிதழ் வழங்கலாம்.

அதேபோல், 10ம் வகுப்பை முறையாக பள்ளியில் பயின்றோ அல்லது தனித்தேர்வராக எழுதியோ அரசு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர் அல்லது தேசிய திறந்தநிலைப்பள்ளி நிறுவனம் (NIOS) வாயிலாக தேர்ச்சி பெற்ற பின்னர் நேரடியாக இசைப்பள்ளிகளில் 3 ஆண்டு படித்து இசைப்பள்ளி பாடங்களில் முதன்மை பாடம் (தாள் 1), முதன்மைப்பாடம் (தாள் 2), துணைப்பாடம் மற்றும் வாய்மொழித்தேர்வு, மேல்நிலை இசையியல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று 12ம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிப்பாடங்களில் தேர்ச்சி பெறும்பட்சத்தில் அவர்களின் இசைப்பள்ளி தேர்ச்சி சான்றிதழை 12ம் வகுப்பு பொதுத்தேர்வு (கலை மற்றும் தொழில் பிரிவுகளில் மட்டும்) தேர்ச்சிக்கு இணைத்தன்மை வாய்ந்தது என அரசு தேர்வுகள் இயக்ககம் சான்றிதழ் வழங்கலாம். மொழித் தேர்வுகள் தங்களுக்கு தேவையில்லை என கருதும் மாணவர்களுக்கு தொடர்புடைய பிரிவில் அரசு தேர்வுத்துறையால் வழங்கப்பட்டு வரும் மாவட்ட இசைப்பள்ளி தேர்ச்சி சான்றிதழை தொடர்ந்து வழங்கலாம். இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது

# கல்பாக்கம் அருகே சாலையை கடக்க முயன்றபோது சைக்கிள் மீது டேங்கர் லாரி மோதல்; 2 பேர் பரிதாப சாவு



திருக்கழுக்குன்றம், ஜூன் 9

கல்பாக்கம் அருகே சாலையை கடக்க முயன்றபோது சைக்கிள் மீது டேங்கர் லாரி பயங்கரமாக மோதியது. இதில் 2 பேர் பரிதாபமாக இறந்தனர். மதுரையை சேர்ந்தவர் கண்ணன் (55). இவர், கல்பாக்கம் அடுத்த சதுரங்கப்பட்டினத்தில் தங்கியிருந்தார். கல்பாக்கம் அடுத்த வாயலூர் கிராமத்தை சேர்ந்தவர் துரை (47). சமையல் வேலை உள்ளிட்ட கிடைத்த வேலையை செய்து வந்தனர். அதன்படி இருவரும் இன்று காலை சமையல் வேலைக்காக சைக்கிளில் புறப்பட்டனர்.

வாயலூர் அருகே இசிஆர் சாலையை கடக்க முயன்ற போது ரசாயனம் ஏற்றி கொண்டு புதுச்சேரியில் இருந்து சென்னை நோக்கி அதிவேகமாக வந்த டேங்கர் லாரி, சைக்கிள் மீது பயங்கரமாக மோதியது. இதில் இருவரும் தூக்கி வீசப்பட்டனர். சம்பவ இடத்திலேயே கண்ணன் துடி,துடித்து இறந்தார். பலத்த காயத்துடன் ரத்த வெள்ளத்தில் கிடந்த துரையை அங்கிருந்தவர்கள் மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர். ஆனால் வழியிலேயே துரை பரிதாபமாக உயிரிழந்தார்.

இருவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய ரசாயன டேங்கர் லாரி சாலையோரத்தில் கவிழ்ந்தது. அதிலிருந்து ரசாயன புகை வெளியேறியதால் அவ்வழியாக வந்த வாகன ஓட்டிகளுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. தகவலறிந்து சதுரங்கப்பட்டினம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து கவிழ்ந்த சாலையை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பின்னர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# தமிழகத்தில் நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் 2.0 விரைவில் துவக்கம்

சென்னை, ஜூன் 9

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் 2.0 விரைவில் முதல்வரால் தொடங்கி வைக்கப்பட உள்ளது. தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாமக்கல்லில் நேற்று காலை 5 மணியளவில், நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தின் கீழ், 8 கி.மீ., தூரம் நடைபயிற்சி மேற்கொண்டார். பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களிடம் கூறியதாவது:

ஜப்பான் நாட்டில் உள்ள டோக்கியோவுக்கு, கடந்த 2023ம் ஆண்டு நிதி ஆதாரம் பெற சென்ற போது, அங்கு ஹெல்த் வாக் என்ற பெயரில், 8 கி.மீ., தூரம் மக்கள் நடந்து சென்றனர். சாலையின் இருபுறமும் மரங்கள் இருந்தது. நடப்பதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளக்கப்பட்டிருந்தது.

இதை பின்பற்றி தமிழகத்திலும் ஹெல்த் வாக் திட்டத்தை செயல்படுத்த தமிழக முதல்வர் உத்தரவிட்டார். அதன்படி, கடந்த 2023 நவம்பர் மாதம் இந்த திட்டம் தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டது. சில மாவட்டங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.தினமும் நடைபயிற்சி மேற்கொள்வதால், உடல் வலிமை, மனவலிமை பெறமுடியும். தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும், நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் 2.0 விரைவில் தமிழ்நாடு முதல்வரால் தொடங்கி வைக்கப்பட உள்ளது. தற்போது மாவட்ட தலைநகரில் மட்டும் இந்த திட்டம் உள்ளது. மற்றொரு நகரத்திலும் நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், விரைவில் நலம் காக்கும் ஸ்டாலின் என்ற மகத்தான திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளார். இத்திட்டத்தின் கீழ், முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மருத்துவம், மகளிர் மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், இதயவியல், நரம்பியல் மருத்துவம், தோல், பல், கண், வாய் மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம் உள்ளிட்ட பிரிவுகளில், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மிகச்சிறந்த கட்டமைப்பு உருவாக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

# வாழப்பாடி அருகே மேம்பாலத்தின் தடுப்புச் சுவரில் கார் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழப்பு



சேலம், ஜூன் 9

வாழப்பாடி அருகே மேம்பாலத்தின் தடுப்புச் சுவரில் கார் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் 4 பேர் படுகாயமடைந்தனர். கர்நாடகாவைச் சேர்ந்த 7 பேர் ஆத்தூரில் இருந்து சேலம் நோக்கி காரில் சென்றபோது விபத்து ஏற்பட்டது. சேலம் – சென்னை நெடுஞ்சாலையில் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார் மேம்பாலதடுப்புச்சுவரில்மோதி விபத்திற்குள்ளானது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
9.6.2025

# ஜூன் 12 மற்றும் 16ம் தேதிகளில் மேட்டூர், கல்லணையை முதல்வர் திறந்து வைக்கிறார்: டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி



தஞ்சாவூர், ஜூன் 9

ஜூன் 12 மற்றும் 16ம் தேதிகளில் மேட்டூர், கல்லணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். இதனால் டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர். மேட்டூர் அணை நீரைக்கொண்டு தமிழகத்தின் 12 மாவட்டங்களும், காரைக்கால் பகுதியும் பயனடைகின்றன. இந்நீரை நம்பி இம்மாவட்டங்களில் மொத்தம் சுமார் 20 லட்சம் ஏக்கரில் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. 12 மாவட்டங்களிலும் சாகுபடி நிலங்கள் சமவெளி பரப்பு என்பதால் வேறு அணைக்கட்டுகள் எதுவும் இன்றி மேட்டூர் அணைநீரை நம்பியே உள்ளது.

இம்மாவட்டங்களில் பயிர் சாகுபடிக்காக ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணை ஜூன் 12ம் தேதி திறக்கப்பட்டு ஜனவரி 28ம் தேதி மூடப்படுவது வழக்கம். தற்போது அணையின் நீர்மட்டம் நூறு அடிக்கும் மேல் நீர்மட்டம் உள்ளதால் மேட்டூர் அணையில் இருந்து வழக்கமான நாளில் அதாவது வரும் 12ம்தேதிடெல்டாமாவட்டங்களின் நெல் சாகுபடிக்காக திறக்கப்பட உள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 12ம்தேதிமேட்டூர்அணையில் இருந்து டெல்டாபாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட உள்ளார்.

இதையடுத்து விவசாயிகள் சாகுபடி முன்னேற்பாடு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். விதைப்புக்கு நாற்றங்கால் தயார் செய்யும் பணி, இயற்கை எரு உரம் இடும்பணி, உழவு பணி ஆகியவைகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் பம்புசெட் வசதியுள்ள விவசாயிகள் முன்பட்ட குறுவைசாகுபடிபணியை தொடங்கி உள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 2025-26ம் ஆண்டில் சுமார் மூன்று லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளது. இதில் தற்போது முன்பட்ட குறுவை பருவத்தில் இது வரை சுமார் 85000 ஏக்கர் பரப்பில் நெல் நடவு பணி முடிவடைந்துள்ளது.

அதில் 20000 ஏக்கரில் இயந்திர நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 10,000 ஏக்கரில் நாற்று விடப்பட்டுள்ளது. நடப்பு குறுவை பருவத்திற்கு தேவையான விதை நெல் ரகங்கள் 211 மெட்ரிக் டன் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு 2025-26ம் ஆண்டில் "குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம்" செயல்படுத்தப்படவுள்ளது. இயந்திர நடவு பணி மேற்கொள்ளும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ. 4000 வீதம் வழங்கப்பட உள்ளது. இயந்திர நடவு செய்யவுள்ள விவசாயிகள் உழவன் செயலியில் முன் பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் உயிரி உரம், நுண்நூட்ட சத்துக்கள் மற்றும் விதைகள் 50% மானியத்தில் வழங்கப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பு தமிழக முதல்வர் வரும் 15ம் தேதி தஞ்சை வருகையின்போது வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல் மேட்டூரில் திறக்கப்படும் தண்ணீர் வரும் 15ம் தேதி இரவு கல்லணை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதைத்தொடர்ந்து 16ம் தேதி காலை கல்லணையில் இருந்து டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது.

இந்நிலையில், அன்றைய தினம் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தஞ்சை மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் நிலையில் கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுதொடர்பாக அரசு அதிகாரிகள் தரப்பில் கேட்டபோது, கல்லணையிலிருந்து தமிழக முதல்வர் தண்ணீர் திறந்து விடுவதற்கான நிகழ்ச்சி ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வரவில்லை என தெரிவித்தனர்.

# 5 ரூபாய் மதிப்புள்ள பார்லேஜி பிஸ்கட் ரூ.2,300 க்கு விற்பனை : காசாவில் அதிர்ச்சி



இந்தியாவில் ரூ.5க்கு விற்கப்படும் பார்லேஜி பிஸ்கட் பாக்கெட் ரூ. 2300 க்கு விற்கப்படுவதாக ஒருவர் கூறிய வீடியோ அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

ஹமாஸ்அமைப்பினருக்கும்இஸ்ரேலுக்கும்இடையே யுத்தம் நடைபெற்று வருகிறது.கடந்த 20 மாதங்களாக காசாவில் இஸ்ரேல் தாக்குதல் நடந்து வருகிறது. இதனால், பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து தவித்து வருகிறார்கள். காசாவில் அத்தியாவசிய பொருட்களுக்கான உணவு, குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. சர்வதேச நாடுகள் மனிதாபிமான உதவிகள் வழங்க முன் வந்த நிலையில் அதற்கு இஸ்ரேல் தடை விதித்தது. கடந்த இரு வாரங்களாக மட்டுமே அந்த தடை நீக்கப்பட்டுள்ளது. லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், காசாவைச் சேர்ந்த முகமது ஜாவத் தன் குழந்தைக்கு பிடித்தமான பார்லே ஜி பிஸ்கட் வாங்கி தந்த வீடியோவை சமூக வலைதளத்தில் வெளியிட்டார். அதன் விலை தற்போது 2,300 ரூபாயாக உயர்ந்துள்ளதாகவும், இருப்பினும் குழந்தையின் ஆசைக்காக வாங்கி தந்தாக அதில் கூறியுள்ளார்.

இதை பார்த்து பலர் அதிர்ச்சியையும், கவலையையும் வெளிப்படுத்தியுள்ளனர். இதனை கண்ட பயனர்கள் பலரும், பார்லே நிறுவனத்தை டேக் செய்து காசா மக்களுக்கு உதவுமாறு கூறி வருகின்றனர். 1938இல் தொடங்கப்பட்ட பார்லேஜி இந்தியாவில் மலிவு விலையில் பிஸ்கட் பாக்கெட்டுகளை விற்பனை செய்து சந்தையில் பிரபலம் அடைந்தது. 2011ஆம் ஆண்டில், நீல்சனின் கூற்றுப்படி, பார்லேஜி உலகின் அதிக விற்பனையான பிஸ்கட்டாக மாறியது.

# உக்ரைன் மீது ரஷியா மீண்டும் டிரோன் தாக்குதல் 3 பேர் சாவு

கீவ், ஜூன் 9

உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் சுமார் 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

இதனிடையே, கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யா மீது உக்ரைன் மிகப்பெரிய அளவில் டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த டிரோன் தாக்குதலில் ரஷ்ய படைத்தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 41 போர் விமானங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டன. இந்த தாக்குதலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதைத் தொடர்ந்து உக்ரைன் மீதான தனது தாக்குதலை ரஷ்யா தொடர்ந்து தீவிரப்படுத்தி வருகிறது. நேற்றைய தினம் உக்ரைனின் 6 மாகாணங்களை குறிவைத்து டிரோன்கள், ஏவுகணைகள் மூலம் ரஷ்ய ராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். இந்த நிலையில், இன்று உக்ரைனின் கிழக்கு பகுதியில் உள்ள கார்கிவ் நகரம் மீது ரஷ்யா டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததாகவும், 21 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (9.6.2025)

**மேஷம்:** சக்தி மற்றும் உன்னத எண்ணம் – இன்று முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். பணி: வேலைகளை நேரத்திற்கு முன் முடித்து மேலதிகம் பாராட்டு பெறலாம். குடும்பம்: தம்பதியுடன் நல்ல நேரம் கழிக்க முடியும்.

**ரிஷபம்:** திட்டமிடல் அவசியம் – எதையும் திட்டமிட்டு செய்ய வேண்டுமென்றே நாள். பணி: கவனமாக செயல்படுங்கள்; திட்டமிக்க வேலை சுகமானது. குடும்பம்: வாதம் வர வாய்ப்பு; அடிக்கடி மன்னிக்கவும்.

**மிதுனம்:** சாதகமாக இல்லை – கவனம் தேவை. பணி: ஒழுங்காக வேலை செய்ய தடை உண்டாகலாம். குடும்பம்: தெளைச்சறிவு நடக்க வாய்ப்பு; வார்த்தையில் கவனம். பணம்: வருமானம் வரும் ஆனால் செலவுகள் உயரும்.

**கடகம்:** உணர்ச்சிநிறைந்தநாள்–மெல்லநிம்மதியாக நடந்து கொள்ள வேண்டும். பணி: குழுவாக வேலை செய்தால் பயன் அதிகம். பணம்: வழக்கம்போல் செலவுகள் – கவனமாக செலவை கையாளவும்.

**சிம்மம்:** திருப்திகரமான நாள் – பணியில் முன்னேற்றம். பணி: நேரத்தைச் சிறப்பாக பயன்படுத்தி மேலோர் பாராட்டைப் பெறலாம். பணம்: வருமானம் திருப்தியளிக்கும்; சேமிப்பிற்கும் இடம்

**கன்னி:** ஆடம்பரமான நம்பிக்கை – சுய நம்பிக்கையை ஊக்குவிக்க. பணி: சாதகமான தினம். பணம்: வருமானம் ↑; செலவுகள் ↑ → சேமிப்பு சிரமம்.

**துலாம்:** கவனத்திற்கு நாள் – மிக நிம்மதியாகவும் சீரான மனோநிலையில் செயல்பட. பணி: பதற்றம் குறைப்ப; சொற்களை கவனியுங்கள். பணம்: இழப்புக் கவனிப்பு தேவை.

**விருச்சிகம்:** மொழியிலும், செயலில் கவனம் தேவை. பணி: திட்டமிட்டு நடக்குங்க; தவிர சென்னை தடுமாற்றம். பணம்: வருமானம் வர வாய்ப்பு; முதலீட்டில் ஆராய்ச்சி செய்வீர்கள்.

**தனுசு:** முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பணி: திறமை வெளிப்படும்; மேலோர் பாராட்டு. பணம்: வருமானம் அதிகம்; சேமித்து பங்கும்போது நல்ல பட்ஜெட்.

**மகரம்:** சட்னையான தினம் – முக்கிய முடிவுகளை எடுக்க தயாராக இருங்கள். பணி: கடுமையாக உழைத்தால் மேலோர் ஆதரவு கிடைக்கும். பணம்: வருமானம் ↑; எதிர்கால சேமிப்போடு வளம்.

**கும்பம்:** சாதகமற்ற நாள் – பதற்றம் வெகுவானது. பணி: ஒழுங்காக செயல்படாமல் இருக்க வேண்டாம். பணம்: வருமானம் குறைவு, செலவுகள் அதிகம் → கடனிலோ? கவனமுடன் செலவு.

**மீனம்:** ஸமதாப அனுபவம் – அமைதியான செயல் நல்கும். பணி: திறமைக்கு அறங்காவலர் பாராட்டு. பணம்: வருமானம் ↑; சேமித்து குடும்பம் சம்பந்தப்பட்ட ஆசைகளை நிறைவேற்றலாம்.

# குன்னூர் வனப்பகுதியில் மாவோயிஸ்ட் தேடுதல் வேட்டை




குன்னூர், ஜூன் 9

குன்னூர் அருகே வனப்பகுதியில் மாவோயிஸ்ட் நடமாட்டம் உள்ளதா? என மாவட்ட எஸ்.பி தலைமையில் போலீசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். நீலகிரி மாவட்டம் தமிழககேரள எல்லையில் அமைந்துள்ள நிலையில் மாவோயிஸ்ட்களின் நடமாட்டம் உள்ளதா என்பது குறித்து மாவட்டம் முழுவதும் போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே கேரள எல்லையில் உள்ள நீலகிரி மாவட்ட வனப்பகுதிக்குள் மாவோயிஸ்ட்கள் நுழைந்து விடாமல் இருக்க நக்சல் தடுப்பு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்ததடுப்புபிரிவுபோலீசார் எல்லையில் உள்ள வனப்பகுதிகளில் மாவோயிஸ்ட்கள் நடமாட்டம் உள்ளதா? என அடிக்கடி சோதனைநடத்தி வருகின்றனர். இந்நிலையில் குன்னூர் வனப்பகுதியில் உள்ள செங்கல்கொம்பை பகுதியில் நேற்று நக்சல் தடுப்பு பிரிவு போலீசார் மாவோயிஸ்ட் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

நீலகிரிமாவட்டபோலீஸ் சூப்பிரண்டு நிஷா தலைமையில் நடந்த இந்த தேடுதல் வேட்டையில் தனிப்படையை சேர்ந்த 10 பேர் பங்கேற்றனர். அவர்கள் இந்த வனப்பகுதியில் உள்ள பழங்குடியினர் கிராமங்களுக்கு சென்று,அங்குள்ள மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். அப்போது கிராமத்துக்குள்புதிய நபர்களின் நடமாட்டம் இருந்தால் போலீசாருக்கு தகவல் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

# ஆர்யாவின் 36வது பட அறிவிப்பு




ஆர்யா வித்தியாசமான கதை, கதாபாத்திரங்களை தேர்வு செய்து நடித்து வருகிறார். நான் கடவுள், மதராச பட்டினம், அவன் இவன், இரண்டாம் உலகம், மகாமுனி, சார்பட்டா பரம்பரை உள்ளிட்ட பல படங்கள் ஆர்யா திறமையான நடிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்தன.இவர்தற்போது 'மிஸ்டர்எக்ஸ்'எனும்திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். இயக்குநர் பா. இரஞ்சித் இயக்கத்தில் வேட்டுவம்படத்தில்நடித்துவருகிறார். இப்படத்தைத்தொடர்ந்து சார்பட்டா இரண்டாம் பாகத்திலும் நடிக்க உள்ளார்.

இந்த நிலையில், ஆர்யாவின் 36வது பட அறிவிப்பு வெளியாகியுள்ளது. .மினி ஸ்டூடியோஸ் வினோத் குமார் தயாரிக்கும் இப்படத்தை 'ரன் பேபி ரன்' படத்தை இயக்கிய ஜியென் கிருஷ்ணமூர்த்தி இயக்குகிறார்.எம்புரான் படத்திற்கு கதை, திரைக்கதை எழுதிய முரளி கோபி இப்படத்திற்கு கதை எழுதியுள்ளார். காந்தாரா படத்தின் இசையமைப்பாளர் அக்னிஷ் லோக்நாத் இசையமைக்கிறார். நாளை மறுநாள் மாலை 5 மணிக்கு படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் படத்தின் பெயர் டீசருடன் அறிவிக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

# கார்த்தியின் சர்தார் 2 படப்பிடிப்பு நிறைவு



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் கார்த்தி. இவரது நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் 'மெய்யழகன்'. இப்படத்தை இயக்குனர் பிரேம் குமார் இயக்கி இருந்தார். அதனைத்தொடர்ந்து, பி.எஸ். மித்ரன் இயக்கத்தில் சர்தார் 2 திரைப்படத்திலும் கார்த்தி நடித்து வருகிறார். அதுமட்டுமில்லாமல், நலன் குமாரசாமி இயக்கத்தில் கார்த்தி தனது 26வது படமான 'வா வாத்தியார்' திரைப்படத்திலும் நடித்து வருகிறார்.

கடந்த 2022ம் ஆண்டு, கார்த்தியின் நடிப்பில் வெளியான படம் 'சர்தார்'. இதில் அப்பா மகன் என இரட்டை வேடத்தில் நடித்திருந்தார் கார்த்தி. இந்த படத்தின் வரவேற்பை தொடர்ந்து இரண்டாம் பாகம் தயாராகி வருகிறது. முதலில் இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். ஆனால், தற்போது அவர் நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக சாம் சி.எஸ் பணிபுரிந்து வருகிறார். முக்கிய கதாபாத்திரங்களில் எஸ். ஜே. சூர்யா, மாளவிகா மோகனன், பிரியங்கா மோகன் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் அறிமுக வீடியோ வெளியாகி வைரலானது.

இந்தநிலையில்,இப்படத்தின்படப்பிடிப்புமுழுமையாகநிறைவடைந்துள்ளதாகபடக்குழுஅதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. எஸ்.ஜே சூர்யா பிளாக் டாகர் என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். கார்த்தியின் 'சர்தார் 2' படம் வருகிற தீபாவளி தினத்தை முன்னிட்டு திரைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கழுகு பட நடிகரின் 2வது திருமண புகைப்படம் வைரல்



மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'அஞ்சலி' திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்த கிருஷ்ணா,'கழுகு' படத்தின் மூலமாக ஹீரோவாக அறிமுகமானார். இவர்தமிழ்த்திரைப்பட இயக்குனர் விஷ்ணுவர்த்தனின் தம்பி ஆவார். இவரது தந்தை பிரபல திரைப்பட தயாரிப்பாளர்.இவர் வல்லினம், யாமிருக்க பயமே, வானவராயன் வல்லவராயன், வன்மம், யாக்கை, நிபுணன், விழித்திரு, வீரா, களரி, மாரி 2, கழுகு 2, ராயர் பரம்பரை பல படங்களில் நடித்துள்ளார். சில படங்களில் சிறப்பு தோற்றத்திலும் நடித்துள்ளார் இவரது சில படங்கள் வெற்றி பெற்ற நிலையில், சில படங்கள் கலவையான விமர்சனங்களைப் பெற்றிருந்தது.

தற்போது சிலர் வெப் தொடர்கள் மற்றும் திரைப்படங்களில் நடித்து வருகிறார். இவருக்கு ஹேமலதா என்பவருடன் திருமணமாகி கடந்த 2016ம் ஆண்டு விவகாரத்தானது. இந்த நிலையில் அவருக்கு மிக எளிமையான முறையில் இரண்டாவது திருமணம் நடந்து முடிந்துள்ளது. அந்த புகைப்படங்கள் தான் இணையத்தில் வைரலாகி கொண்டிருக்கிறது. அவர் தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் மனைவியுடன் எடுத்த திரைப்படங்களை பகிர்ந்து புதிய ஆரம்பம் என்று பதிவு வெளியிட்டு இருக்கிறார். இந்த பதிவு வெளியான சில நிமிடங்களில் அதிகமான லைக்குகள் மற்றும் கமெண்டுகளை பெற்று வருகிறது.

# அவர்கள் இல்லாதது அவமானம் இந்திய டெஸ்ட் தொடர் குறித்து கிறிஸ் வோக்ஸ் ஆதங்கம்



இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. 4வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் சுழற்சிக்கு உட்பட்ட தொடர்இது என்பதால் இருஅணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அத்துடன் ரோகித், விராட் கோலி டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று விட்டதால் அவர்கள் இல்லாமல் இந்திய அணி எப்படி விளையாட போகிறது? என்ற கேள்வி பலரது மத்தியில் எழுந்துள்ளது. மேலும் அவர்களின் இடத்தை நிரப்பப்போவது யார்? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்நிலையில் இந்த தொடரில் விராட் கோலி, ரோகித் சர்மா போன்ற தரமான வீரர்கள் விளையாட மாட்டார்கள் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு அவமானமானவிஷயம்என்றுஇங்கிலாந்துவேகப்பந்துவீச்சாளரானகிறிஸ்வோக்ஸ்ஆதங்கத்தைவெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "இந்தியா போன்ற வலுவான அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரில் விளையாடுவது எப்போதும் நல்லதாக இருக்கும். ஏனெனில் அந்தத் தொடரில் நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடினமாக போராட வேண்டும். கடந்த பல வருடங்களாக நாங்கள் விராட் கோலி, ரோகித் சர்மாவுக்கு எதிராக நல்ல போட்டியைக் கொண்டிருந்தோம். தற்போது அவர்கள் இங்கே இல்லாதது இந்தபோட்டிக்கு அவமானமானது

இருப்பினும் இந்திய கிரிக்கெட்டில் ஆழமான திறமை இருக்கிறது. இங்கே வந்துள்ள வீரர்கள் ஏற்கனவே தங்களுடைய திறமைகளை நிரூபித்த உயர்தரமானவர்களாக இருப்பார்கள் என்று உறுதியாக சொல்வேன்" என கூறினார்.

# டிஎன்பிஎல்: திருச்சி அணிக்கு எதிராக நெல்லை பந்துவீச்சு தேர்வு



9வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடர் கோவை, நெல்லை, சேலம், திண்டுக்கல் ஆகிய 4 இடங்களில் நடக்கிறது. இதன் முதல் கட்ட லீக் ஆட்டங்கள் கோவையில் உள்ள எஸ்.என்.ஆர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக்சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெறும்.இதில் தற்போது வரை 2 லீக் ஆட்டங்கள் முடிந்துள்ளன. இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடக்கும் 3வது லீக் ஆட்டத்தில் நெல்லை ராயல் கிங்ஸ் திருச்சி கிராண்ட் சோழாஸ் அணிகள் மோதுகின்றன. இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற நெல்லை அணியின் கேப்டன் அருண் கார்த்திக் பந்துவீச்சை தேர்வு செய்தார் . அதன்படி திருச்சி அணி முதலில் பேட்டிங் செய்கிறது.

# ஸ்ரேயாஸ் ஐயருக்கு அடித்த அதிர்ஷ்டம்.. இந்திய அணியின் கேப்டனாகும் வாய்ப்பு..?

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான ஸ்ரேயாஸ் ஐயர் சமீப காலமாக பேட்டிங் மட்டுமின்றி கேப்டன்சியிலும் அசத்தி வருகிறார். சமீபத்தில் நிறைவடைந்த 18வது ஐ.பி.எல். தொடரில் அவரது தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணி இறுதிப்போட்டி வரை முன்னேறி அசத்தியது. இருப்பினும் இறுதிப்போட்டியில் 6 ரன் வித்தியாசத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியிடம் தோற்று கோப்பையை கையில் ஏந்தும் வாய்ப்பை நழுவ விட்டது.

இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் மூன்று வெவ்வேறு அணிகளை இறுதிப்போட்டிக்குள் அழைத்து சென்ற ஒரே கேப்டன் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். கடந்த 2020ம் ஆண்டு டெல்லி அணியையும், 2025ம் ஆண்டு கொல்கத்தா அணியையும், இந்த சீசனில் பஞ்சாப் அணியையும் ஸ்ரேயாஸ் ஐயர் இறுதிப்போட்டிக்கு அழைத்து சென்றுள்ளார். வேறு எந்த வீரரும்ஒன்றுக்குமேற்பட்டஅணிகளுக்குஇதைச்செய்ததில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது.அதுபோகஉள்ளூர்தொடர்களிலும் கேப்டன்ஷிப்பில் அசத்தலாக செயல்பட்டு வருகிறார். அத்துடன் இந்த ஐ.பி.எல். சீசனில் பேட்ஸ்மேனாகவும் 604 ரன்கள் குவித்து அசத்தினார். மேலும் ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கோப்பை, சாம்பியன்ஸ் டிராபி என அனைத்து சமீபத்திய தொடர்களிலும் சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்தி வருகிறார். இதனால் எதிர்வரும் இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அவரை சேர்க்காதது விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இந்திய வெள்ளைப்பந்து கிரிக்கெட் அணியின் (ஒருநாள் மற்றும் டி20) கேப்டன்சி வாய்ப்பில் ஸ்ரேயாஸ் ஐயர் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதில் ஸ்ரேயாஸ் ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணியின் கேப்டனாக வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது. தற்போது இந்திய ஒருநாள் அணியின் கேப்டனாக ரோகித் சர்மாவும், டி20 அணியின் கேப்டனாக சூர்யகுமார் யாதவும் உள்ளனர். இவர்களில் ரோகித் சர்மா இன்னும் எவ்வளவு காலம்? விளையாடுவார் என்பது தெரியவில்லை. ஏனெனில் டி20 மற்றும் டெஸ்ட் வடிவத்தில் இருந்து ஏற்கனவே ஓய்வு பெற்று விட்ட அவர் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாட உள்ளார். இதன் காரணமாக அந்த வடிவத்தில் இருந்தும் விரைவில் ஓய்வு பெற வாய்ப்புள்ளது. இதன் காரணமாக சமீப காலங்களில் பேட்ஸ்மேனாக மட்டுமின்றி கேப்டன்சியிலும் அசத்தும் ஸ்ரேயாஸ் ஐயர், இந்திய தேர்வுக்குழுவை ஈர்த்துள்ளார். இதனால் இந்திய அணியின் கேப்டன்ஷிப் வாய்ப்பில் ஸ்ரேயாஸ் ஐயரையும் பி.சி.சி.ஐ. சேர்த்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.